2024 – டிசம்பர் மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 310 / 2019 C/W 309 / 2019*

*2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, பாரதிராஜா |
| தகப்பனார் பெயர் | : | அன்பழகன் |
| ஊர் | : | பொன்பரப்பி குடிக்காடு |
| வட்டம் | : | செந்துறை |
| மாவட்டம் | : | அரியலூர் |
| தொழில் | : | நடத்துனர் ( தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், அரியலூர் கிளை) |
| வயது | : | 44 |

**தேதி: 17.11.2024.**

**முதல் விசாரணை:-**

நான் இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**குறுக்கு விசாரணை:– ( மனுதாரர் தரப்பில்)**

19.03.2019–ம் தேியன்று T N 45 N 2317 என்ற அரசுப்பேருந்தில் நடத்துனராக பணிபுரிந்தேன். அன்றை தினத்தில் நான் நடத்துனராக இருந்த பேருந்தில் கிருஷ்ணன் என்பவர் ஓட்டுநராக பணிபுரிந்தார். அவர் விபத்திற்கு பின்னிட்டு இறந்து விட்டார். விபத்து இரவு நேரத்தில் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தானது இரவு 09.00 மணியளவில் நடந்தது. அன்றைய தினம் பேருந்தில் 25 பயணிகள், பயணம் செய்தார்கள். நானே பேருந்திற்குள்ளே நடந்து

சென்று தான் பயணிகள் இருக்கைக்கே சென்று பயணச்சீட்டு கொடுத்தேன். அவ்வாறு நான் பேருந்திற்கு நடந்து சென்று பயணச்சீட்டு கொடுக்கும் போது பேருந்தின் முன் புறத்தில் விபத்து ஏற்பட்டால் அது எனக்கு தெரியாது. அது போல் பேருந்தின் மையப்பகுதியில் இருந்து பேருந்தின் முன்புற சாலையை பார்த்தால் தெரியாது என்றால் சரிதான். அதே போன்று பேருந்தின் மையப்பகுதயில் இருந்து முன்புறசாலையில் எதிரே வரும் வாகனங்கள் தெரியாது. எங்கள் பேருந்தில் தான் விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் நான் கீழே இறங்கி சென்று பார்த்தேன். விபத்தில் காயம்பட்ட இரண்டு பேர் எழுந்து நின்று விட்டார்கள், மற்றொருவர் கீழே கிடந்தார், பொதுமக்களும்,பயணிகளும் கூடி கீழே கிடந்த நபரை தூக்க முற்பட்டார்கள், அத்துடன் என்னையும், ஓட்டுநரையும் அடிக்க முற்பட்டார்கள், நான் பயந்து போய் வேறு உதவி எதுவும் செய்யாமல் பக்கத்தில் மறைவான இடத்திற்கு சென்று ஒதுங்கிக்கொண்டோம். எங்கள் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் பேருந்தின் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்று அவர்களும் அடிக்க வந்ததால் ஓட்டுநருடன் சென்று நானும், பயந்து ஓடிவிட்டேன் என்று சொன்னால் சரிதான். இந்த விபத்திற்கு எங்களது ஓட்டுநர் தான் காரணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களது போக்குவரத்து நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க போக்குவரத்து நிறுவனம் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்களது ஓட்டுநர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்றேன். மறுநாள் காவல் நிலையத்தில் ஓட்டுநருக்கு இரண்டு நபர்கள் ஜாமீன் கொடுத்தார்கள் என்றால் சரிதான். பேருந்தை வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கு எடுத்து சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஓட்டுநர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி எனக்கு தெரியாது என்றால் 3 அல்லது 4 நாட்கள் பணியிடை நீக்கம் செய்தார்கள் என்று தெரியும். எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக பொய்யான தவறான நிரூபண

வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து இழப்பீட்டுத்தொகை கொடுப்பதை தவிர்ப்பதற்காக பொய்யான சங்கதிகள் கூறி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-**

விபத்து நடந்த மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்ற போது போலீசாரிடம் நான் எதுவும் கூறவில்லை, என்னிடம் எதுவும் போலீசார் எழுதி வாங்கவில்லை.

**மறு குறுக்கு விசாரணை:- இல்லை.**

**ஒப்பம்/-சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**